# துறையூர் நகராட்சி

2018 ஆம் வருடம் மார்ச் மாதம் 05ஆம் நாள் திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றஅவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திருமதி. ஏ.ஆர்.பாப்பம்மாள், தனி அலுவலர்

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th colspan="2">வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>05.03.2018</td><td>01.</td><td>துறையூர் நகராட்சி வடக்குத்தெரு பகுதியில் தற்போது TURIP (Additional) 2016–17 திட்டத்தின் கீழ் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி துவக்கப்பட உள்ளதால், மேற்படி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு சாலை அமைக்கும் பணிக்கு முன் பழைய பழுதான நிலையில் உள்ள பைப்லைனை மாற்றி புதிதாக பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீடு ரூ.6.20 இலட்சத்திற்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.314 நாள்.28.12.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 07.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.07% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர்</td><td>மதிப்பீட்டை விட 0.10% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 9610/2017/இ1)<br><br>
அலுவலக குறிப்பு.. திரு.T.இந்திரஜித், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.344 னுமதிக்கப் பட்டது.</td></tr>
<tr><td>05.03.2018</td><td>02.</td><td>துறையூர் நகராட்சி வார்டு எண்.7 அர நடரரஜன் காலனி பகுதியில் தற்போது TURIP (Additional) 2016–17 திட்டத்தின் கீழ் தார்சாலை அமைக்கும் பணி துவக்கப்பட உள்ளதால், மேற்படி பகுதியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு சாலை அமைக்கும் பணிக்கு முன் பழைய பழுதான நிலையில் உள்ள பைப்லைனை மாற்றி புதிதாக பைப்லைன் அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு ரூ.50000/–க்கு ஏற்கனவே நகர்மன்ற தீர்மான எண்.313 நாள்.28.12.2017ல்</td><td>தீர்மான எண்.345 அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிட்டு 07.02.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு. (ந.க.எண். 9611/2017/இ1)

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம் |
|---|---|---|
| 1 | திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 2 | திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.09% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1–ல் உள்ள திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண். 9611/2017/இ1)

**அலுவலக குறிப்பு..** திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். நிர்வாக நலன் கருதி உடன் பணி முடிக்க வேண்டிய அவசியத்தை கருதி பணி உத்தரவு வழங்கியதை அங்கீகரிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 05.03.2018 | 03. | துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு குப்பை வண்டி TN4X 7856 தகுதி சான்று பெற பழுது நீக்க உத்தரவு வழங்கப்பட்டுள்ளதில் மேற்கண்ட கூடுதல் பணிகள் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளி மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.346 அனுமதிக்கப் பட்டது.** . |

| வ. எண் | வேலையின் பெயர் | ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் 32A, பூக்கொல்லை தெரு, தஞ்சாவூர் ரோடு, திருச்சி. | ரீத்தா ஆட்டோ கேரேஜ் 10, சென்னை பைபாஸ் சாலை திருப்பதி ஸ்டோர் அருகில் திருச்சி | கூடாமினிக் ஆட்டோ கேரேஜ் 23, அன்பில் தர்மலிங்கம் சாலை, எடமலைப்பட்டி புதூர் திருச்சி. |
|---|---|---|---|---|
| 01 | To overhauling clutch and to changing kits to clutch m/c assembly & clutch s/c any and to grinding flywheel for aid cover assembly fan | 3500 | 4000 | 4000 |
| 02 | To recondition gear bole top and to changing bush kit to gear nod end assembly | 1500 | 2200 | 2000 |
| 03 | **Cost of Spares**<br>01) Clutch pild bearing – 1 No<br>02) Clutch Plop - 1 No<br>03) Clutch release bearing – 1 No<br>04) Clutch marter cylinder – 1 No<br>05) Clutch slave cylinder – 1 No<br>06) Brake Oil - ½ lit<br>07) Gear rod bushes kit – 1 No | 350<br>3450<br>1250<br>400<br>300<br>150<br>1100 | 500<br>2700<br>1400<br>500<br>400<br>180<br>1200 | 400<br>3400<br>1350<br>500<br>400<br>200<br>1300 |
| | Total<br>GST 18 % | 12000<br>2160 | 14080<br>2534 | 13550<br>2439 |
| | Grand Total | 14160 | 16614 | 15989 |

| | | | |
|---|---|---|---|
| | | **அலவலக குறிப்பு :**<br>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் துறையூர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம். மேலும், இப்பணியின் அவசர அவசியம் கருதி, பொது சுகாதார பணிக்கு மேற்கண்ட வாகனம் அவசியம் தேவைப்படுவதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலர் / ஆணையர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.299/2011/எச்1) | |
| **05.03.2018** | **04.** | துறையூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு குப்பை வண்டி TN48H4626 வாகனத்திற்கு **6** டயர்கள் புதியதாக வாங்க விலைப்புள்ளிகள் **10.11.2017**ல் பெறப்பட்டது. மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.**47115/–**க்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.**279** நாள்.**30.11.2017**ல் ஒப்புதல் பெறப்பட்டது. மேலும் தற்போது **20.02.2018**ல் திருத்திய விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன்படி **6** டயர்களுக்குள் (டயர்+டியூப்+பிளாப்) விலை ரூ.**47883/–** வரப்பெற்றுள்ளது. ஆகவே கூடுதல் செலவினம் ரூ.**47883/––47115=768/–** மன்ற ஒப்புதலுக்குபொருள்வைக்கப்படுகிறது. (ந.க.எண்.**3280/2012**/எச்1)<br>**அலுவலக குறிப்பு:**<br>பொது சுகாதார பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் / ஆணையரின் முன் அனுமதி பெற்று கூடுதல் செலவின தொகை ரூ.**47883–47115=768/–** செலுத்த மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.347 அனுமதிக்கப் பட்டது.** |
| **05.03.2018** | **05.** | துறையூர் நகராட்சியில் துப்புரவு பணிக்கு மனித ஆற்றல் சப்ளை செய்யும் பணிக்கான ஒப்பந்தக்காலம் **30.09.2017**வுடன் முடிவடைவதால் **28.07.2017** அன்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளும் **4.9.2017** அன்று பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ) அவர்களால் தொழில்நுட்ப காரணங்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது.<br>மேலும் **28.07.2017**ம் தேதிய ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு **3** நிறுவனங்களில் உதயா அசோசியேட்ஸ், நிறுவனம் தனது ஒப்பந்தப்புள்ளியினை தகுதியின்மை செய்தது தொடர்பாக **26.10.2017**ல் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.18903/2017ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கு தொடர்பாக அரசு வழக்கறிஞர் திரு.இராஜராஜன் மூலம் வழக்கை நடத்தி கொடுக்க தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் முதற்கட்டமாக **26.10.2017**ல் இடைக்கால தடைவிதித்து (இரண்டு வாரம்) உத்தரவிடப்பட்டுள்ளது.<br>மேலும் இவ்வழக்கு **16.11.2017** அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதில் Post after 2 weeks for filling counter, interim order order already granted is extended until further order என நீதிமன்ற உத்தரவிடப்பட்டுள்ளது.<br>ஆகவே மேற்கண்ட வழக்கு ஒப்பந்த காலத்தில் முடிவடையும் பட்சத்தில் நீதிமன்ற நடவடிக்கைக்கு கட்டுப்பட வேண்டும் என்ற நிபந்தனையில் அடிப்படையில் இப்பணியினை செய்து வரும் உதயா அசோசியேட்ஸ் துறையூர் நிறுவனம் பெற்ற இடைக்கால தீர்ப்பின்படி மறு உத்தரவு வரும் வரை ஏற்கனவே உள்ளவாறு பணி தொடர அளிக்கப்பட்ட உத்தரவின்படி ஏற்கனவே பணி செய்து வரும் உதயா அசோசியேட்ஸ் நிறுவனத்திடம் ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் படி பணி மேற்கொள்ள ஒப்புதல் கடிதம் அளித்ததன் பேரில் **01.01.2018** முதல் **31.03.2018** வரை நபர் ஒன்றுக்கு ரூ.**352/–** என்ற விலை விகிதத்தில் பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.**304** நாள்.**15.12.2017** ஒப்புதல் | **தீர்மான எண்.348 அனுமதிக்கப் பட்டது.** |

<table>
<tr><td></td><td>06.</td><td>பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேலும் இப்பணி காலம் 31.3.2018வுடன் முடிவடைவதால், இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி பொது சுகாதாரப் பணிகள் தொய்வின்றி நடைபெற நீதிமன்ற இடைக்கால தீர்ப்பின் அடிப்படையில் இப்பணியினை 01.04.2018 முதல் 30.09.2018 வரை நபர் ஒன்றுக்கு ரூ.352/– என்ற விலை விகிதத்தில் (183x32x352=2061312/-) பணி மேற்கொள்ள மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையினை கருத்தில் கொண்டு அத்தியாவசிய தேவையான துப்புரவு பணி தொய்வின்றி மேற்கொள்ளவும், டெங்கு மலேரியா மற்றும் பன்றிகாய்ச்சல் போன்ற நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கும் துப்புரவு பணியாளர்கள் பணி அவசியமாவதாலும் மேற்கண்ட பணியினை உதயா அசோசியேட்ஸ் நிறுவனம் அளித்த விண்ணப்பத்தினை நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.352/– என்ற விலை விகிதத்தில் (183x32x352=2061312/-) வீதம் 01.04.2018 முதல் 30.09.2018 முடிய துப்புரவு பணிக்கு மனித ஆற்றல் சப்ளை செய்யும் பணிக்கு வேலை உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.5670/2011/எச்1)</td><td></td></tr>
<tr><td>05.03.2018</td><td>06.</td><td>2018–19ம் ஆண்டு முதல் 2020–2021ம் ஆண்டு முடிய மூன்று ஆண்டுகளுக்கு துறையூர் நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்தில் உள்ள நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமைக்கு 21.02.2018ம் தேதி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்துகொள்ளவில்லை. ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி கேட்டுள்ளார்கள்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் முகவரி</th><th>ஏலக்கேள்வி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.செ.ராஜேந்திரன்,<br>த/பெ.செல்லமுத்து,<br>22, விநாயகர் தெரு, துறையூர்</td><td>ரூ.9,19,000/–</td><td>இல்லை</td></tr>
<tr><td>2</td><td>திரு.ஜெய்சங்கள்,<br>த/பெ.பச்சையப்பன்,<br>நடுப்பட்டி தெரு,<br>செங்காட்டுப்பட்டி, துறையூர் தாலூகா</td><td>ரூ.9,17,000/–</td><td>இல்லை</td></tr>
<tr><td>3</td><td>திரு.ப.மணிவேல்,<br>த/பெ.பழனியாண்டி,<br>22, பாலக்காட்டு மாரியம்மன் கோவில் தெரு, துறையூர்</td><td>ஏலக்கேள்வி இல்லை</td><td>இல்லை</td></tr>
<tr><td>4</td><td>திரு.செ.முத்துசாமி,<br>1A, விநாயகர் தெரு, துறையூர்</td><td>ரூ.9,18,500/–</td><td>இல்லை</td></tr>
</table>
திரு.செ.ராஜேந்திரன் என்பவரின் ஓராண்டு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9,19,000/– கடந்த ஆண்டு ஏலத்தொகையை விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும் உள்ளது. மேற்கண்ட ஏலத்தில் திரு.செ.ராஜேந்திரன் என்பவரின் ஓராண்டுக்கான உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9,19,000/–ஐ ஊர்ஜிதம் செய்யவும் அரசாணை எண்.181 ந.நி.ம.கு.வழங்கல்(நிதி4) துறை நாள்.19.09.2008ன் படி 2018–19 முதல் 2020–2021 முடிய உரிமத்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைப்பு</td><td>தீர்மான எண்.349 அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>செய்தும் இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்தும் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.36/2017/அ1)<br>அலுவலக குறிப்பு:<br>திரு.செ.ராஜேந்திரன் என்பவரின் ஓராண்டு உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9,19,000/– கடந்த ஆண்டு ஏலத்தொகையை விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும் உள்ளதால் திரு.செ.ராஜேந்திரன் என்பவரின் ஏலக்கேள்வியை ஊர்ஜிதம் செய்தும் அரசாணைப்படி 2018–19 முதல் 2020–2021 முடிய உரிமத்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்தும் வழங்கலாம். இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்தும் வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>05.03.2018</td>
<td>07.</td>
<td>2018–19ம் ஆண்டு முதல் 2020–2021 ம் ஆண்டு முடிய மூன்று ஆண்டுகளுக்கு துறையூர் நகராட்சிக்கு சொந்தமான சுவாமிநாதன் தினசரி காய்கனி மார்க்கெட்டில் உள்ள 1 முதல் 45 கடைகள் மற்றும் அதற்கு செல்லும் நடைபாதைகள் நீங்கலாக பின்பக்கம் (கிழக்கே) உள்ள காலியிடத்தில் தரையில் வைத்து விற்பனை செய்யும் சிறுவியாபாரிகளிடம் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமைக்கு 21.02.2018ம் தேதி பொத ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஏலத்தில் கீழ்கண்ட நபர்கள் கலந்து கொண்டு ஏலக்கேள்வி கேட்டுள்ளார்கள்.
<table>
<tr><th>வ.எண்</th><th>பொது ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் முகவரி</th><th>ஏலக்கேள்வி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.வை.செல்லதுறை,<br>38, விநாயகர் தெரு, துறையூர்</td><td>கேள்வி இல்லை</td><td>இல்லை</td></tr>
<tr><td>2</td><td>திரு.செ.முத்துசாமி,<br>1A, விநாயகர் தெரு, துறையூர்</td><td>ரூ.9,97,000/–</td><td>இல்லை</td></tr>
<tr><td>3</td><td>திரு.ஆ.பாண்டியன்,<br>த/பெ.ஆவுடையப்பன்,<br>3/H லெட்சுமிகாந்தபுரம்,<br>எக்ஸ்டென்சன்,<br>துறையூர்</td><td>ரூ.9.96.000/–</td><td>இல்லை</td></tr>
<tr><td>4</td><td>திரு.செ.ராஜேந்திரன்,<br>த/பெ.செல்லமுத்து,<br>22, விநாயகர் தெரு, துறையூர்</td><td>ரூ.9,91,000/–</td><td>இல்லை</td></tr>
<tr><td>5</td><td>திரு.ஜெய்சங்கள்,<br>த/பெ.பச்சையப்பன்,<br>நடுப்பட்டி தெரு,<br>செங்காட்டுப்பட்டி, துறையூர்<br>தாலூகா</td><td>ரூ.9,88,000/–</td><td>இல்லை</td></tr>
<tr><td>6</td><td>திரு.ரவிவர்மா,<br>43, அவுல்பட்டறை சந்து, துறையூர்</td><td>ரூ.9,89,000/–</td><td>இல்லை</td></tr>
</table>
திரு.செ.முத்துசாமி என்பவரின் ஓராண்டு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9,97,000/– கடந்த ஆண்டு ஏலத்தொகையை விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும் உள்ளது. மேற்கண்ட ஏலத்தில் திரு.செ.முத்துசாமி என்பவரின் ஓராண்டுக்கான உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9,97,000/–ஐ ஊர்ஜிதம் செய்யவும் அரசாணை எண்.181 ந.நி.ம.கு.வழங்கல்(நிதி4) துறை</td>
<td>தீர்மான எண்.350 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | நாள்.19.09.2008ன் படி 2018–19 முதல் 2020–2021 முடிய உரிமத்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்தும் இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்தும் வசூலிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.36/2017/அ1)<br>**அலுவலக குறிப்பு:**<br>திரு.செ.முத்துசாமி என்பவரின் ஓராண்டு உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை ரூ.9,97,000/– கடந்த ஆண்டு ஏலத்தொகையை விட கூடுதலாகவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும் உள்ளதால் திரு.செ.முத்துசாமி என்பவரின் ஏலக்கேள்வியை ஊர்ஜிதம் செய்தும் அரசாணைப்படி 2018–19 முதல் 2020–2021 முடிய உரிமத்தை மூன்று ஆண்டுகளுக்கு ஒப்படைப்பு செய்தும் வழங்கலாம். இரண்டாம் ஆண்டில் 5% குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் குத்தகை தொகையில் 5% உயர்வு செய்தும் வசூலிக்கவும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| **05.03.2018** | **08.** | துறையூர் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் 1. ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் குத்தகை உரிமம், 2. பெரம்பலூர் சாலை, தம்மம்பட்டிசாலை, சாலை ஓரமரங்களின் மேல் மகசூல் அனுபவிக்கும் உரிமம், 3. சுாமிநாதன் தினசரி மார்க்கெட் கடை எண்.43 மற்றும் 45க்கான குத்தகை உரிமம், 4. வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,4,6,8,9,10,11,12,13,14,15,16 மற்றும் 17க்கான குத்தகை உரிமம் மேலே கண்ட குத்தகை இனங்களுக்கு 21.02.2018ல் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை என்ற விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.36/2017/அ1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். | **தீர்மான எண்.351 அனுமதிக்கப் பட்டது.** |
| **05.03.2018** | **09.** | இந்நகராட்சியில் 2017–18 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIP 2017-18) திட்டத்தின் கீழ் பழுதடைந்த தார்சாலைகளை புதுப்பிக்கவும் மற்றும் புதியதாக தார்சாலைகள் அமைக்கும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளியினை இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புதுறை சென்னை. மூலமாக ரவி பப்ளிசிட்டி சர்வீஸ் சென்னை மூலம், தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் மாலைமலர் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக்கட்டணத்தை தொகை ரூ.68145/– (அறுபத்து எட்டாயிரத்து நூற்று நாற்பத்தி ஐந்து மட்டும்) மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.1698/2017/இ1)<br>**அலுவலக குறிப்பு:**<br>அ) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவினத்தை பொதுநிதியில் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.352 அனுமதிக்கப் பட்டது.** |
| **05.03.2018** | **10.** | துறையூர் நகராட்சி கலிங்க விநாயகர் சந்து பெரிய ஏரி நீர் வரத்து வாய்க்கால் முதல் சின்ன ஏரி வரை நீர்வரத்து வாய்க்கால் குப்பைகள் அகற்றுதல் (ம) மண் அள்ளுதல் (Silt Removal) பணிக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.353 அனுமதிக்கப் பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலையின் பெயர்</th><th>ஸ்ரீ அம்மன் எர்த் மூவர்ஸ், திருவரங் கப்பட்டி மண்ணச் சநல்லூர்</th><th>P.A.S எர்த்மூவர் ஸ் & டிராக்டர்ஸ், 3/268, திருச்சி ரோடு, துறையூர்</th><th>அருண்குமார் JCB டிராக்டர் லாரி சர்வீஸ், பகளவாடி, நல்லவண்ணி பட்டி, துறையூர் வட்டம்</th></tr>
<tr><td>1</td><td>கலிங்க விநாயகர் சந்து, பெரிய ஏரி நீர்வரத்து வாய்க்கால் முதல் சின்ன ஏரி வரை நீர்வரத்து வாய்க்கால் குப்பை அகற்றி மண் அள்ளுதல் (Silt Removal)</td><td>ரூ.750/– (ஒரு மணி நேரத்திற்கு)</td><td>ரூ.800/– (ஒரு மணி நேரத்திற்கு)</td><td>ரூ.850/– (ஒரு மணி நேரத்திற்கு)</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில், ஸ்ரீ அம்மன் எர்த் மூவர்ஸ், திருவரக்கப்பட்டி , மண்ணச்சநல்லூர் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம். மேலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த ஸ்ரீ அம்மன் எர்த்மூவர்ஸ் அவர்களுக்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.5072/2017/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>05.03.2018</td>
<td>11.</td>
<td>
துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சொரத்தூர் ரோடு, சாயக்காரத்தெரு, மேட்டுத்தெரு ஆகிய கழிப்பறைகளின் மல குழிகள் சுத்தம் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எ ண்</th><th>வேலையின் பெயர்</th><th>வைஷ்ணவி செப்டிக் டேங் கிளினிங் துறையூர்</th><th>மாதவன் செப்டிக் டேங் கிளினிங் துறையூர்</th></tr>
<tr><td>1</td><td>பவுண்டுபட்டி, சொரத்தூர் ரோடு, சாயக்காரத்தெரு, மேட்டுத்தெரு ஆகிய கழிப்பறைகள் மலக்குழிகள் சுத்தம் செய்தல் (நடை 1–க்கு)</td><td>ரூ.2500/– (நடை 1–க்கு)</td><td>ரூ.2600/– (நடை 1–க்கு)</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த வைஷ்ணவி செப்டிக் டேங் கிளினிங் துறையூர் அவர்களின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம். மேலும் இப்பணியின் அத்தியாவசிய தேவையினை கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் / ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியமைக்கும் குறைந்த விலைப்புள்ளிக்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.5072/2017/எச்1)
</td>
<td>தீர்மான எண்.354<br><br>அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 05.03.2018 | **12.** | இந்நகாட்சி பணியாளர்கள் 2018–2019ம் ஆண்டிற்கு அலுவலக பணி நிமித்தம் காரணமாக வெளியூர் பயணங்கள் மேற்க்கொள்வதற்கு உத்தேசமாக பயணப்படி தொகை ரூ350000/–வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது(ந.க 1316/சி1/2018<br>(அ.கு) மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண்.355 அனுமதிக்கப் பட்டது.** |

ஒம்/–ஏ.ஆர்.பாப்பம்மாள்,
தனி அலுவலர்

/உண்மை நகல் /

ஆணையர்,
துறையூர் நகராட்சி.